பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரமோதூத ஹூ பங்குனி ௴ 17 ௨ ஞாயிற்றுக்கிழமை [31-03-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 124

# மன்னார் தாக்குதலில் 25 சிப்பாய்கள் மரணம்!

## பதினொரு வேங்கைகள் களப்பலி

யாழ்ப்பாணம், மார்ச் 31

நேற்று அதிகாலை மன்னார் வேப்பங்குளம் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவப் படை அணி ஒன்றை விடுதலைப் புலிகள் சுற்றி வளைத்துத் தாக்கியதில் 25 இற்கும் அதிகமான சிப்பாய்கள் உயிரிழந்தனர்.

சுமார் ஆறு மணி நேரம் நீடித்த இந்தத் தாக்குதலில் விடுதலைப் புலிகளின் தரப்பில் 11 வேங்கைகள் களப்பலியாகினர்.

கஜூவத்தை ராணுவ முகாமிலிருந்து வெளியேறி, காட்டுப் பகுதியால் வேப்பங்குளத்தை வந்தடைந்த ராணுவத்தினரைச் சுற்றிவளைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

காலை 5.30 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை தாக்குதல் தொடர்ந்தது.

தாக்குதலின் போது உயிரிழந்த 24 படையினரின் சடலங்களை தமது போராளிகள் கண்டதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. ராணுவத் தரப்பில் மேலும் பலர் உயிரிழந்திருக்கக் கூடும் எனச்சந்தேகிக்கப்பட்டது.

இந்த மோதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் ஜான், பைமன், ரவி, கண்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## சிலாவத்துறை பகுதியில் குண்டு வீச்சு!

யாழ்ப்பாணம், மார்ச் 31

மன்னார் மாவட்டம் சிலாவத்துறையில் நேற்று முன்தினம் மாலை 5.20 மணியளவில் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல் இடம்பெற்றது.

பொம்மர் ஒன்று அடுத்தடுத்து 4 குண்டுகளை வீசியது. எனினும் பெரிய சேதம் ஏதும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. [உ]

## அள்ளப்பட்ட ஆயுதங்கள்

மன்னார் வேப்பங்குளத்தில் நேற்று இடம்பெற்ற தாக்குதலின்போது ஸ்ரீலங்கா இராணுவத்தினரிடமிருந்து பெருமளவு ஆயுதங்களை விடுதலைப் புலிகள் அள்ளி எடுத்தனர்.

புலிகளால் மீட்கப்பட்ட ஆயுதங்களின் விவரம் வருமாறு :-

★ மினிமினி எல்.எம் ஜி — 5
★ அதற்குரிய எக்ஸ்ட்ரா பரல் — 5
★ 60 எம். எம். மோட்டார் — 5
★ அதற்குரிய ஷெல் — 32
★ ஆர். பி. ஜி. ரகத் துப்பாக்கி — 2
★ அதற்குரிய ஷெல் — 19
★ ஆர். பி. ஜி. புரொப்லர் — 18
★ 40 எம்.எம்.பிஸ்டல் — 1
★ 40 எம். எம். பிஸ்டல் ஷெல் — 12
★ எவ். என். ஸி. ரகத் துப்பாக்கி — 16
★ அதற்குரிய மகஸின் — 92
★ 5·56 ரக ரவை — 32 ஆயிரத்து 500
★ பரா லைட் — 2
★ 60 எம். எம். மோட்டார் பரா லைட் ஷெல் — 2
★ ஜே. ஆர். ரக கிரனேட் — 39
★ புகைக் குண்டு — 6
★ ரி. என். ரி. வெடிமருந்து — 4 கட்டி

— இத்தகவலை விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. [உ]

## முத்தமிழ்விழாவைசிறப்பிக்க வீதிகளில் அலங்கார வளைவு

யாழ்ப்பாணம், மார்ச் 31

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கலை, கலாசாரப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் முத்தமிழ் விழாவைச் சிறப்பிக்கும் வகையில் குடாநாட்டின் பல பகுதிகளிலும் வீதிகளில் அலங்கார வளைவுகள், பழந்தமிழ்ப் பெருமைகளைச் சித்தரிக்கும் காட்சிப் பந்தல்கள் என்பன அமைக்கப்பட்டு வருகின்றன.

வீதிகள் தோறும் சிறப்பாக சோடனைகளைச் செய்யவும் அவ்வப்பகுதி மக்கள் ஏற்பாடு செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ் மாவட்டத்தில் முதல் மூன்று சிறந்த அலங்கரிப்புகளுக்கு சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படும் என்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ் மாவட்ட பிரசாரப் பிரிவு அறிவித்துள்ளது. [உ-15]

## ட்ரக் - ஓட்டோ கோர விபத்து! ஒரே குடும்பத்தில் 4 பேர் பலி!!

### ஓட்டோ சாரதியும் மரணம்; அராலியில் பயங்கரம்

யாழ்ப்பாணம், மார்ச் 31

அராலி, செட்டியா மடத்தடியில் நேற்று நண்பகல் நடந்த கோரமான வாகன விபத்தில் ஐந்து பேர் உயிரிழந்தனர்.

இவ் விபத்தில் ''ஓட்டோ'' ஒன்றில் பயணம் செய்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வரும் ''ஓட்டோ'' சாரதியும் விபத்து நடந்த இடத்திலேயே மரணமானார்கள்.

காரைநகர் களபூமியைச் சேர்ந்த கந்தப்பு ஆறுமுகம் [75 வயது], அவரது மனைவி பத்மாசினி ஆறுமுகம் [60 வயது] அவர்களின் பிள்ளைகள் இந்திராணி [22 வயது], யோகநந்தினி [18 வயது] ஆகியோரும், ''ஓட்டோ'' சாரதியான யாழ்ப்பாணம் ஐந்தாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த தம்பித்துரை தயானந்தம் [40 வயது] என்பவருமே உயிரிழந்தவர்களாவர்.

அவர்கள் பயணம் செய்த ''ஓட்டோ'' காரைநகரி

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கீரிமலைப் பகுதியில்நேற்றும் தொடர்ந்து மோதல் சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச் 31

கீரிமலைப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் நேற்றும் தொடர்ந்து மோதல்கள் இடம்பெற்றன.

இராணுவத்தினர் அடிக்கடி ஷெல் வீச்சுக்களை நடத்தியதோடு துப்பாக்கிப் பிரயோகமும் செய்தனர்.

விடுதலைப் புலிகளும் 'பசிலன்' தாக்குதல் உட்பட எதிர்த் தாக்குதல்களை நடத்தினர்.

இராணுவத்தினர் ஏவிய 'ஷெல்'களில் பெரும்பாலானவை குடியிருப்புப் பகுதிகளிலேயே விழுந்து வெடித்து வீடுகளைச் சேதமாக்கின.

பீரங்கித் தாக்குதல்களும் பொதுமக்களின் வீடுகளையே பாதித்தன. [ஆ-15]

## அமைதியாக நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சை

யாழ்ப்பாணம், மார்ச் 31

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் விசேட பரீட்சை நேற்று வடக்கு - கிழக்கில் நடைபெற்றது.

யாழ். மாவட்டத்தில் 98 நிலையங்களில் பரீட்சை அமைதியாக நடைபெற்றதாகவும்—

இடம் பெயர்ந்த மாணவர்கள் அதற்கென அமைக்கப்பட்ட விசேட நிலையங்களில் தோற்றினர் என்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. கே. தங்கராஜா உதயனுக்குத் தெரிவித்தார்.

இதேவேளை — தீவகப் பகுதி பரீட்சை நிலையங்கள், வடமராட்சி கிழக்கில் சில நிலையங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து நிலையங்களிலிருந்தும் பரீட்சை விடைத்தாள்கள் நேற்று மாலை யாழ். புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்துக்கு எடுத்து வரப்பட்டன.

இரண்டொரு தினங்களில் விடைத்தாள்கள் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் உதவியுடன் வவுனியாவுக்கு கொண்டு செல்லப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. [உ-5]

## வளலாயில் ஷெல் தாக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 31

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று நண்பகல் 11.50 மணியளவில் வளலாய்ப் பகுதியை நோக்கி 4 ஆட்லறி ஷெல்கள் ஏவப்பட்டன. பெரும் சேதம் ஏற்பட்டதாகத் தெரியவரவில்லை. [உ]

## ஆனையிறவில் ஷெல் தாக்கு; இயக்கச்சியில் சிறுவன் காயம்

நேற்றுக் காலை ஆனையிறவு முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல் இயக்கச்சிப் பகுதியில் விழுந்து வெடித்ததில் சிறுவன் ஒருவன் காயமடைந்தான்.

எஸ். தங்கா [வயது 13] என்ற சிறுவனே காயமடைந்து பளை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டான்.

இதேவேளை நேற்று முன்தினமும் காலை 8 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து நாலாபுறமும் ஷெல்களும், ஆட்லறி ஷெல்களும் ஏவப்பட்டன. [உ-117]

## போர் நிறுத்தம் கேட்கிறார் கலாசார அமைச்சர்

கொழும்பு, மார்ச் 31

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்று வரும் அநியாய மரணங்கள் நிறுத்தப்படவேண்டும். போர் நிறுத்தம் அங்கு ஏற்படவேண்டும்.

கலாசார அமைச்சர் பி.வி. கவிரத்னா நேற்று முன் தினம் கண்டியில் நடைபெற்ற தமிழ் சாஹித்திய தின விழாவில் பேசுகையில் இவ்வாறு சொன்னார்.

பைத்தியக்காரத்தனமான இன வேறுபாடுகளை ஒழிக்க வேண்டும் என்றும் அமைச்சர் சொன்னார்.

''எரிக்கப்பட்ட யாழ்ப்பாணம் நூலகத்தை மீண்டும் கட்ட வேண்டும். இதை நாம் செய்யாவிட்டால் எப்படி கலாசாரம் வளர முடியும்?'' - என்று அவர் கேட்டார்.

## முச்சந்தி முரளி



[illegible]
றெடுத்து ஓடும் எண்டு
சொல்லுங்கோ......!

## குவைத் எண்ணெய்ப் புகை இமயமலையில் படிகிறது!

ஜம்மு, மார்ச் 31

குவைத் எண்ணெய்க் கிணறுகள் எரிந்து கொண்டிருப்பதன் காரணமாக எழும் புகைமண்டலம் இமயமலைப் பகுதிகளை மாசுபடுத்தியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இமயமலைப் பனிப் பிரதேசத்தில் சுமார் 2 அங்குலத்திற்கு எண்ணெய்ப் படிவங்கள் படிந்து இருக்கக் காணப்படுவதாக ஜம்மு மாநில அரச அதிகாரிகள் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

Olympia ஆங்கில தட்டச்சு இயந்திரம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 8/1, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். [16258]

தட்டச்சு இயந்திரங்கள் ஆங்கிலம் Standard - portables, Brother, Oliverty Silver-Reed, Olympia, Optima விற்பனைக்கு உண்டு. பியூடோ, 39/17, மின்சாரநிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி-5896]

### தேவை

பாவித்த சம்போ, ஒடிக்கலோன், Gum [கம்] Vicks போத்தல், பவுடர் டப்பா, போல்ப்பொயின்ட் பேனா சனிக்கிழமைகளில் மட்டும் காலை 9 மணி முதல் 12 மணி வரை வாங்கப்படும். S. சத்தியன் 55, மணிக்கூண்டு வீதி, கொழும்பு அருடியோ பின்புறம், யாழ்ப்பாணம். [இ-5867]

### வியாழன் வக்கிரம்

31-3-91 வியாழ வக்கிரம் முடிகின்றது. 13-4-91 ராகு கேது மாறுகின்றன. இதனால் ஏற்படும் யுத்த நிறுத்தங்கள் [சனி, ராகு, வியாழ, கேதுகளுக்கு யுத்தச் செவ்வாயின் கெட்ட பார்வையால்] வெற்றியளிக்காது. நூல்களுக்கும், ஜோதிட கணிப்புகளுக்கும் Prof. சத்தியதாஸன் [Mech. E, Elec. E] ஞானம் ஸ்ரோர்ஸ், சித்தன்கேணி. [16259]

### மல்லிகை விற்பனையாகின்றது

மார்ச் இதழ் வெளிவந்து விட்டது. இவ்விதழில் 'வரதரின் தீவாத்தியார்' தொடர் ஆரம்பமாகியுள்ளது. தரமான எழுத்தாளர்களின் எழுத்தோவியங்கள் இடம் பெற்றுள்ளன. தொடர்ந்து படிக்கத் தவறாதீர்கள். புத்தகசாலைகளில் கிடைக்கும். [இ/5891]

### மணமகன், மணமகள் தேவை

மெதடிஸ்த மிஷன் மதத்தைச் சார்ந்த 47 வயதுடைய அரச நிர்வாக தரத்திலுள்ள சகோதரனுக்கும், 38 வயது உடைய படித்த அழகிய சகோதரிக்கும் தனித்தனியே அல்லது மாற்றாக செய்ய தாயார் விரும்புகின்றார். மணமகள் அழகிய படித்தவராகவும், சீதனமும் கவனிக்கப்படும், மணமகளுக்கும் சீதனம் வழங்கப்படும். வேறு மதத்தவர்களும் ஆலோசிக்கப்படும். வி. இல. 195 மே/பா உதயன், யாழ்ப்பாணம். [16171]

### மணப்பெண்கள் தேவை

கனடாவில் குடியுரிமை பெற்ற இரு சகோதரர்களுக்கு ஆங்கில அறிவுடைய அழகிய மணப்பெண்கள் தேவை. பதிவுத்திருமணம் முடிந்ததும் கனடா கூட்டிச் செல்லப்படுவர். ஞ. திருவிளங்கம், புதிய மாங்கல்யா 16/16 வளன்புரம், கொழும்புத்துறை. [16243]

### மணமகன் தேவை

இந்துமத வயது 28 நட்சத்திரம் மகம், செவ்வாய் தோஷமற்ற கொழும்பில் பொறியியலாளராக [பேராதனை] கடமை புரியும் அழகான மணமகளுக்கு அதற்குத் தகுதியான அல்லது சிறிது படிப்புக் குறைந்த [வெளிநாட்டு படிப்பு தவிர்த்த] மணமகன் தேவை. சீதனம் கொடுக்கப்படும். உடன் விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். 200, C/o உதயன். [3894]

### A/L பொருளியல்

1992 புதிய பாடத்திட்டத்திற்கமைவான மாணவர் பயிற்சிக் கைநூல் வெளிவந்து விட்டது. ஆக்கியோன்: V. கருணாகரன் B. A. Hons வியாபாரிகள், மாணவ மன்றத்தினர் கழிவு விலையில் பெறலாம். தொடர்பு: 215, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [16226]

### அம்பாள் திருமண சேவை

வெளிநாட்டிலிருக்கும் மணமக்களுக்கு 26 வயதிற்குட்பட்ட அழகிய மணப்பெண்கள் தேவை. சீதனம் அதிகம் எதிர்பார்க்கப்படமாட்டாது. ஜாதகக் குறிப்புடனும், புகைப்படத்துடனும் உடன் தொடர்பு கொள்ளவும். சின்னச்சாமிக் குருக்கள் சண்முகம், வீரமாகாளி அம்மன் கோவிலடி, 140, பருத்தித்துறைவீதி, யாழ்ப்பாணம்; [16252]

### கல்வி

G.C.E.[O/L]இல் கட்டாய பாடமாகிய கணிதபாடத்தில் இதுவரை சித்தி அடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் 24 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் தொடர் வகுப்புகள் மூலம் 20 மணித்தியாலங்களிலிருந்து 40 மணித்தியாலங்களுக்குள் ஆரம்ப அறிவிலிருந்து விசேஷ சித்திக்குக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, கண்டிக்குளி. [16260]

### பெந்தெகோஸ்த் சுவிசேஷ ஆராதனை

சுண்டிக்குளியில் உள்ள பெந்தெகோஸ்த் சபை கடந்த நான்கு தினங்களாக வருடாந்த சுவிசேஷ ஆராதனைகளை நடத்தி வருகிறது. ஈஸ்டர் தினமான இன்று ஞாயிறு மாலை 4-00 மணிக்கு நடைபெறும் ஆராதனையுடன் நிகழ்ச்சிகள் பூர்த்தி அடைகின்றன. [இ]

---

## A/L 90 விஞ்ஞான பாடங்கள்
## முன் மாதிரிப் பயிற்சிப் பரீட்சையும்
## இலவச கருத்தரங்கும்

பிரவேசம்: எமது நிறுவனத்தில் கற்கின்ற, கற்காத அனைத்து மாணவர்களும் பங்குபற்றலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 02-04-91 | செவ்வாய் | 9-00 | இரசாயனவியல் | I |
| 03-04-91 | புதன் | 9-00 | பௌதிகவியல் | I |
| 04-04-91 | வியாழன் | 9-00 | விலங்கியல் | I |
| 05-04-91 | வெள்ளி | 9-00 | தாவரவியல் | I |

★ கால அவகாசம் போதாமையினால் மேற்படி பாடங்களின் பகுதி - IIம், தூய, பிரயோக கணிதமும் பரீட்சையாக நடத்த முடியாமைக்கு வருந்துகிறோம். அனைத்து விஞ்ஞான பாடங்களினதும் [தூய, பிரயோக கணிதம் உட்பட] பகுதி I&II இற்கான மாதிரி வினாத்தாள்களுடன் கருத்தரங்கு இலவசமாக நடத்தப்படும். பரீட்சையில் கலந்து கொள்ள முடியாதவர்களும் கருத்தரங்கில் கலந்து கொள்ளலாம்.

**BOND INSTITUTES**

58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[16254]

---

## 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் அழைப்பிதழும்



**இராசகோபால் சந்திரன்**

அன்னை மடியில்:
08 - 02 - 1965

கொடியவர் அழிப்பில்:
31 - 12 - 1990

பாசக்கயிற்றை அறுத்து நீ எங்கே சென்றாய் மகனே! சோதரனே! பாசத்தின் விழிம்பில் இருந்தே பரிதவிக்கின்றோம் நாம். நீ விண்ணுலகு சென்று தொண்ணூறு நாட்கள் சென்றதையா காணா முகம் காணாது தவிக்கின்றோம்.

சந்திரன் என்று செல்லமாய் அழைத்து வந்த உன்னை சதித்திட்டம் தீட்டிய வஞ்சகர்கள் வழிமறித்து காத்து நின்னுயிரை பறித்தனரே! மணக் கோலத்தில் காண இருந்த எங்களை பிணக் கோலத்தில் காண வைத்தார்களே கொடியவர்கள்.

31 - 03 - 91 இன்று நடைபெறும் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும்:
அம்மா, அண்ணாமார், அண்ணிமார், சகோதரி.
நண்பர்கள். உற்றார், உறவினர்கள்.

12/10, கேசாவில்,
பிள்ளையார் கோவிலடி,
வண்ணார்பண்ணை. [3890]

---

## வைத்தியர் பற்றாக்குறை நீங்கும்

பருத்தித்துறை ஆதாரவைத்திய சாலையில் நிலவும் வைத்தியர்கள் பற்றாக்குறை நீங்க உள்ளது.

பருத்தித்துறைஆதார வைத்தியசாலை அபிவிருத்திச்சபை வைத்தியர்கள் பற்றாக் குறை தொடர்பாக யாழ். சுகாதார சேவைகள் அத்தியட்சகருக்கு அண்மையில் எடுத்துக் கூறியது.

இக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட யாழ். சுகாதார சேவைகள் அத்தியட்சகர் ஏப்ரல் 15 ஆம் திகதியிலிருந்து உள்ளக பயிற்சிகளை முடித்த நான்கு வைத்தியர்களை அனுப்புவதாக அபிவிருத்திச் சபைக்கு உறுதியளித்துள்ளார். [இ-118]

---

உ
கணபதி துணை

## உபநயந அழைப்பிதழ்
[பூணூல் தரித்தல்]

அன்புடையீர்!

நிகழும் பிரமோதூத வருடம் பங்குனி மாதம் 18 ஆம் நாள் [01-04-1991] திங்கட்கிழமை காலை 6-11 மணி தொடக்கம் 6-50 மணி வரையுள்ள மீனலக்கின சுபமுகூர்த்த வேளையில்

எனது கனிஷ்ட குமாரன்
## சிரஞ்சீவி கிருஸ்ணகுமாரனுக்கு

உபநயந பிர்மோபதேசம் செய்ய விநாயகப் பெருமான் திருவருள்ப்படி பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து உபநீதனை ஆசிர்வதித்தும் வாழ்த்தியும் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

[தனிப்பட்ட அழைப்பிதழ்கள் அனுப்பப்படமாட்டா]

இங்ஙனம்,
தங்கள் நல்வரவை நாடும்:

பிரம்மஸ்ரீ. கி. கைலாசநாதக்குருக்களும் பாரியாரும்,
மஹாதேவப் பிள்ளையார் கோவிலடி,
சங்கானை.

வரவேற்பாளர்கள்:

பிரம்மஸ்ரீ. சாமி கி. பாலகிருஷ்ணக்குருக்களும் பாரியாரும்
சாமி கி. கணேசராஜசர்மா
சாமி கை. கிருஷ்ணமோகனசர்மா
வை. கருணாகரேஸ்வரக் குருக்கள் தம்பதிகள்.

[16261]

---

## ★ மழலை ★
## புகைப்பட நிலையம்

முத்தமிழ் விழாவை முன்விட்டு இதுவரை காலமும்

"பேபி போட்டோ"

என்ற பெயரில் இயங்கி வந்த எமது புகைப்பட நிலையம் தற்போது தமிழில் மாற்றப்பட்டு

### மழலை புகைப்பட நிலையம்

என இயங்கி வருகிறது என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உங்கள் மழலைச் செல்வங்களின்
உயிரோவியமான படங்களுக்கு

மழலை புகைப்பட நிலையம்,
பல்கலைக்கழக சந்தி,
பலாலிவீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். [16227]

---

## அந்தியேட்டி அழைப்பும் நினைவஞ்சலியும்

| | |
|---|---|
| வீரவேங்கை | வீரவேங்கை |
| கப்டன் அமலன் | தம்புத்துரைச்சாமி |
| தம்புத்துரைச்சாமி | சீதாலெட்சுமி |
| விஜயசிங்கம் (விஜயம்) | (யேக்கா) |
| வீர ஜெனனம்: 10-03-69 | வீர ஜெனனம்: 23-06-70 |
| வீர மரணம்: 04-01-91 | வீர மரணம்: 30-11-90 |

வீரமரணமடைந்த வேங்கைகளின் அந்தியேட்டிக் கிரியைகளும், ஆத்மசாந்தி பிரார்த்தனையும் மாதகல் கனால் வீதியில் உள்ள காங்கேயமூர்த்தியின் இல்லத்தில் 03-04-91 புதன் கிழமை காலை நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள், அனுதாபிகள் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

மூ. காங்கேயமூர்த்தி,
கனால் வீதி,
மாதகல்.

ந. தம்புத்துரைச்சாமி,
மயிலிட்டி,

[16257]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## நினைவு நாட்கள் வழி காட்டட்டும்

இன்று மார்ச் 31 ஆம் திகதி. இம்முறை, யேசு கிறிஸ்து நாதர் உயிர்த்தெழுந்த நாளும் இன்றைய தினமே கொண்டாடப்படுகிறது. அது மட்டுமன்றி, தமிழர் உரிமைப் போராட்டத்தின் ஊற்றுக் கண்ணாக விளங்கிய தந்தை செல்வநாயகத்தின் 94ஆவது பிறந்த நாளும் இன்றாகும். தமிழ் ஆசிரியர் தொழிற் சங்கவாதியான எஸ். கே. வனசிங்காவின் இரண்டாவது நினைவு தினமும் இன்று அமைகின்றது.

ஆண்ட தமிழினம்; அந்நியரால் அடிமைப்படுத்தப்பட்டது. சிங்களவர்கள் அவர்களைத் தொடர்ந்தும் அடிமைகளாக வைத்திருக்க முயல்கிறார்கள். அதற்கு இடம் கொடுக்க முடியாது. தமிழினம் தன்னைத் தானே மீண்டும் ஆளவேண்டும். அது அவர்களது பிறப்புரிமை, வாழ்வுரிமை. எனவே அவர்களுக்கு என்று தனியரசு, தமிழரசு நிறுவப்பட வேண்டும் — என்ற நிலைப்பாட்டுடன், அதனை அடைய அகிம்சை முறைப் போராட்டங்களை அறிமுகப்படுத்தியவர் தந்தை செல்வா.

இலங்கை ஆங்கிலேயரிடம் இருந்து சுதந்திரம் பெற்ற பின்னர், சிங்கள அடிமைத்துவத்தை வென்று, தமிழர்கள் தமக்கென ஓர் அரசை நிறுவ வேண்டும் என்ற உணர்வு தமிழர்களிடையே பெருமளவில் உற்றெடுத்துப் பிரவாகிக்க அடித்தளமாகவும், நேர்மையான வழிகாட்டியாகவும் விளங்கியவர் தந்தை செல்வா.

தமிழர்களின் தனியரசுக்கான உரிமைப் போராட்டம், பல இன்னல்கள், இழப்புக்களின் மத்தியிலும் இன்று உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது. தமது உயிரையும் துச்சமென மதித்துப் போராடும் தியாகப் போராளிகளே அதற்குக் காரணர்கள். தனித்தமிழ் அரசைத் தீர்க்க தரிசனத்துடன் நோக்கி அதற்காக உயிருள்ளவரை உழைத்தவர் தந்தை செல்வா. இன்றைய நிலைக்கு ஆரம்பப் புள்ளியிட்டவர் அவர்.

அவரது தனியரசு இலட்சியம் விரைவில் நிறைவேற, அதனை இப்போது முன்னெடுத்துச் செல்லும் போராளிகளுக்குப் பூரண ஆதரவு வழங்குவதே அவரை நினைவு கூருவதற்குப் பொருத்தமான சைமாறாகும்.

ஆசிரியர் தொழிற் சங்கவாதியாகத் திகழ்ந்த எஸ். கே. வணசிங்கா, வடக்கு-கிழக்கு, ஈழத்தமிழர்களின் பிரிக்கமுடியாத தாயகம் என்ற அசையாத நிலைப்பாட்டையும், கொள்கையையும் உடையவராக விளங்கினார். தமது தொழிற் சங்கப் பணிகள் பலவற்றின் மூலம் அதனைச் செயலிலும் காட்டியவர். அத்தோடு தமிழர் போராட்டங்களில் முன்னணியில் நின்றவர். வெளிநாடுகளில் நடைபெற்ற பல தொழிற்சங்க மாநாடுகளில் தமிழினத்தின் பிரச்சினைகளை அச்சமின்றி வெளிப்படுத்தியவர் அவர்.

தமிழர் உரிமைப் போராட்டத்திற்கு தன்னால் இயன்ற அளவில் ஆதரவாளனாகவும், பங்காளியாகவும் இருந்தவர்.

அவரது செயற்பாடு ஏனையோருக்கு ஓர் முன்னுதாரணமாகும். போராட்டத்தில் நேரடியாகப் பங்கு கொள்ள முடியாதவர்களாயினும் வேறு வகைகளால், தம்மால் இயன்றளவேனும் போராட்டத்தில் பங்காளிகளாக வேண்டும். மிகக் குறைந்த எண்ணிக்கையினர் கூட பார்வையாளர்களாக இருக்க முயலக் கூடாது.

நினைவு நாட்கள் அதற்கு வழிகாட்டட்டும்.

---

நிர்வாக சேவை

# வடக்கில் தோற்றியவர்களுக்கு பரீட்சை முடிவு இன்னும் இல்லை

## கிழக்கில் தோற்றியோர் நேர்முகப்பரீட்சைக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 31

வட மாகாணத்தில் இருந்து நிர்வாகச் சேவை அதிகாரிகள் பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கு இன்னும் முடிவுகள் அறிவிக்கப்படவில்லை. நேர்முகப்பரீட்சைக்கும் அவர்கள் அழைக்கப்பட இல்லை.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நிலவும் நிர்வாக அதிகாரிகளின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யஇந்தவிஷேட பரீட்சை நடத்தப்பட்டிருந்தது.

இப் பரீட்சையில் கிழக்கு மாகாணத்தில் சித்தியடைந்தவர்கள் விவரம் மட்டும் வெளியிடப்பட்டு நேற்று கொழும்பில் நேர்முகப் பரீட்சையும் நடைபெற ஏற்பாடாகி இருந்தது. ஆனால் வடக்கில் இருந்து தோற்றியோர் பற்றி எந்தவித அறிவிப்பும் இதுவரை இல்லை.

இதனை அடுத்து வடக்கில் இருந்து தோற்றியவர்களின் பரீட்சை முடிவுகளையும், நேர்முகப் பரீட்சைத் திகதியையும் உடன் அறிவிக்கும்படி யாழ். அரச அதிபர் திரு அன்ரன் அல்பிரட் அத்தியாவசிய சேவைகள் நாயகத்தைக் கேட்டுள்ளார். [இ-3]

## அன்னை பூபதி நினைவாக பொது அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 31

அன்னைபூபதியின் நினைவு தினத்தை முன்னிட்டு, விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் மாணவர்களுக்கான பொதுஅறிவுப் போட்டியையும், கட்டுரைப் போட்டியையும் நடத்துகிறது.

பொதுஅறிவு போட்டியில் ஒவ்வொரு தலையங்கத்திலும் ஐந்து கேள்விகள் கேட்கப்படும். ஒவ்வொரு தலையங்கத்தின் கீழும் குறைந்தது மூன்று கேள்விகளுக்குப் பதில் எழுத வேண்டும். மூன்றுக்கு மேற்பட்ட கேள்விகளுக்குப் பதில்தரப்பட்டிருந்தால் இந்தப் பதில்களுக்கு ஏனையவற்றுக்குரிய புள்ளிகளில் அரைப் பகுதியே கிடைக்கும். இவ் விதமாகமொத்தம் 64 கேள்விகளுக்குப் பதில் அளிக்க வேண்டும்.

11 ஆவது, 12 ஆவது தலையங்கங்களின் கீழ் ஒவ்வொன்றிலும் இரு கேள்விகளுக்கு மாத்திரம் பதில் அளிக்க வேண்டும்.

கட்டுரை எழுதுவதற்காக பதினொரு தலையங்கங்கள் தரப்படும் இதில் அன்னை பூபதிபற்றிய கட்டுரை கட்டாயமானது. ஏனைய 10 தலையங்கங்களில் ஏதாவது ஒன்றின் கீழ் கட்டுரை வரையலாம். [இ]

### மீனவர் காப்புறுதி

மீனவர் காப்புறுதித்திட்டம் அடுத்த வாரம் முதல் அமுலுக்கு வர இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் ஆறு லட்சம் மீனவர்கள் பயனடைவர். [இ-எ]

## தாதிப் பயிற்சியை முடித்த செஞ்சிலுவைத் தொண்டர்

யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ். போதனாவைத்தியசாலை தாதிகள் பயிற்சியை முடித்துக் கொண்ட யாழ். செஞ்சிலுவைச்சங்க தொண்டர்களுக்கு பயிற்சியில் சித்தி அடைந்தமைக்கான சான்றிதழ் யாழ். போதனா வைத்தியசாலையின் டாக்டர் தெய்வேந்திரன் தலைமையில் வழங்கப்பட்டது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு யாழ். மாவட்டத் தலைவர் திரு. பிரட் இச்சான்றிதழ்களைவழங்கினார்.

பயிற்சி பெற்ற 30 மாணவர்களில் 27 பேரே சித்தியெய்தினர். [இ - 15]

## தமிழில் தயாரிக்கப்படாத படிவம் குறித்து கண்டனம்

யாழ்ப்பாணம், மார்ச் 31

இடமாற்றம் பெற்று யாழ். மாவட்டத்துக்கு வந்த ஆசிரியர்கள் தமது சம்பள விவரத்தை சத்தியக் கடதாசி மூலம் சமர்ப்பிப்பதற்காக யாழ் கல்வித் திணைக்களம், தயாரித்து வெளியிட்ட படிவம் தமிழில் இல்லாதது குறித்த இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

சங்கப் பொதுச் செயலாளர் திரு. மகாலிங்கம் இது தொடர்பாக கல்விப் பணிப்பாளருக்குக் கடிதம் எழுதி உள்ளார்.

யாழ் கல்வித் திணைக்களமே தமிழ் மொழியை அமுல் செய்யாமல் இருப்பது மிகவும் வேதனை தருவதாகவும் தமிழ் மொழியில் படிவத்தை தயாரித்து ஆசிரியர்களுக்கு வழங்கும்படியும் சங்கத்தின் பொதுச்செயலாளர் கோரியுள்ளார். [இ]

## கிறிஸ்துவின் உயிர்ப்பு விழா

ஈஸ்டர் எனப்படும் கிறிஸ்துவின் உயிர்ப்புவிழா இன்று உலகம் எங்கும் கொண்டாடப்படுகின்றது. அதனையொட்டி இது பிரசுரமாகிறது.

கிறிஸ்தவர்களுக்கு, புத்துணர்ச்சியும், புதுவாழ்வும் அளிக்கும் நன்னாள் கிறிஸ்துவின் உயிர்ப்புநாள். எல்லோரையும் இறைவனிடம் இழுத்துச் செல்லும் காந்தச் சக்தி உடையது கிறிஸ்துவின் உயிர்ப்பு. கருணை வள்ளல் எம்பெருமான் இயேசுவின் உயிர்ப்பினால் கிறிஸ்தவ உலகம் புனிதமடைகின்றது. இறைமகன் இயேசு சாவை வென்று வெற்றி வீரராய் உயிர்த்தார்: மனித குலத்தின்மீது தான் கொண்ட அளவற்ற அன்பிற்கு அவரின் உயிர்ப்பு சான்றாக விளங்குகின்றது.

''நானோ ஆடுகள் உயிர் பெறும்படி வந்தேன். அதை மிகுதியாய் [illegible] பொருட்டே வந்தேன். நான் அவற்றிற்கு முடிவில்லா வாழ்வு அளிக்கின்றேன். அவை என்றும் அழியா''.

கிறிஸ்துவின் உயிர்ப்பு திருச்சபையின் [illegible] ஒவ்வொரு கிறிஸ்தவனிலும் ஒடுகின்றது. கிறிஸ்துவின் உயிர்ப்பு நமக்குக் கற்பிப்பது துன்பம், சிலுவை, மரணம் இவைகண்டு கிறிஸ்தவன் அச்சமுறலாகாது. ஏனெனில் நாம் பின்பற்றும் கிறிஸ்து சாவை, பாவத்தை, துன்ப துயரங்களை வென்றவர்.

இயேசு உயிர்த்துவிட்டார். ஆம் கடவுள் உயிர்த்துவிட்டார். அக்கடவுளின் பிள்ளைகள் உயிர்த்த வாழ்வு வாழ வேண்டும்

உயிர்த்த வாழ்வு - அன்பு வாழ்வு, சுதந்திர வாழ்வு உரிமை வாழ்வு, மகிழ்ச்சி வாழ்வு, சமாதான வாழ்வு வாழப்படவேண்டும்.

பாவங்களை விடுத்து வாழும் வாழ்வே இவ் உயிர்த்த வாழ்வு, அன்பிலே பண்பட்ட வாழ்வே இவ் உயிர்த்த வாழ்வு.

அன்பு செய்வோம். அதன் [illegible] சான்று பகர்வோம். [இ]

வண பிதா பி. எம். இம்மானுவல்

---

## நிவாரணம் பெற மற்றும் ஒரு சந்தர்ப்பம்

பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளையில் இரண்டாம் கட்ட மீளக் குடியமர்வு நிவாரணம் ரூபா ஆயிரம் இதுவரை பெறாதவர்களுக்கு ஏப்ரல் 6 ஆம் திகதி அது வழங்கவுள்ளதாக வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன. [இ-118]

## கிளிநொச்சியில் தமிழ்த் தின போட்டி

தாளையடி, மார்ச், 31

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்தினப் போட்டி எதிர்வரும் 8 ஆம் திகதி கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெறும்,

கொத்தணி மட்டத்தில் நடத்தப்பட்ட போட்டிகளில் முதல் இடங்களைப் பெற்றவர்கள் இப் போட்டிகளில் கலந்து கொள்வார்கள். [இ-144]

## பெண் காயம்

கீரிமலைப்பகுதியில் இருந்து வெள்ளிக்கிழமை துப்பாக்கி வேட்டுக்களும் ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

இச் சம்பவத்தில் பெண் ஒருவர் காயம் அடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

கொல்லங்கலட்டி, தையிட்டிப்புலத்தைச் சேர்ந்த இளையதம்பி பொற்கொடி [வயது 65] என்பவரே காயம் அடைந்தவர் ஆவார். வீட்டு முற்றத்திலிருந்த சமயம் இவர் காயமடைந்தார். [இ-15-68]

## குர்டிஷ் போராளிகளை கைவிட்டதற்கு கண்டனம்

லண்டன், மார்ச் 31

ஈராக்கில் குர்டிஷ் தான் என்ற பெயரில் தனிநாடு அமைக்க தற்போது தீவிர சண்டையில் ஈடுபட்டிருக்கும் குர்டிஷ் போராளிகளை அமெரிக்கா கைவிட்டது குறித்து கண்டனம் செய்து லண்டன் பத்திரிகைகள் கருத்து வெளியிட்டுள்ளன.

வளைகுடாப் போர் முடிவடைந்த பின்னர் ஜனாதிபதி சதாமை பதவி கவிழ்க்க உள்நாட்டில் கிளர்ச்சிகளைத் தூண்டிவிட்ட அமெரிக்கா, பின்னர் அவர்களைக் கைவிடும் கொள்கையை ஏன் எடுத்தது? என்றும் லண்டன் பத்திரிகைகள் கேள்வி எழுப்பியுள்ளன. [இ-எ]

## எண்ணெய்வள கிர்குக் யார் கட்டுப்பாட்டில்?

நிக்கோஸியா, மார்ச் 31

ஈராக்கின் முக்கிய எண்ணெய் நகர் கிர்குக்யாரின் கட்டுப்பாட்டில் உள்ளது என்பது பற்றி முரணான தகவல்கள் வெளியாகி உள்ளன.

வளைகுடாப்போர் முடிந்த பின்னர் குர்டிஷ் இனக்கிளர்ச்சியாளர் மேற்கொண்டு வருகின்ற சண்டையில் கிர்குக் நகர் கிளர்ச்சியாளர் கட்டுப்பாட்டிற்குள் வந்தது.

ஆனால் கடந்த வியாழன் நடந்த கடும் சண்டையின் பின்னர் கிர்குக் நகரை மீண்டும் கைப்பற்றி விட்டதாக ஈராக் அரசுப்படைகள் அறிவித்தன.

எனினும் குர்டிஷ் இனப் போராளிகள் இதனை மறுத்துள்ளனர்.

இன்னும் கிர்குக் நகர் தமது கட்டுப்பாட்டிலேயே தொடர்ந்து இருப்பதாக குர்டிஷ் கிளர்ச்சியாளர்கள் அறிவித்துள்ளனர். [இ-எ]

## சொந்த நாட்டுக்காக பெரும் சேவை ஆற்றியவர்

### பேராசிரியர் கந்தையாவுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், மார்ச் 31

பேராசிரியர் கந்தையாவின் பல ஆராய்ச்சிக் கண்டு பிடிப்புகள் குறிப்பாக வட இலங்கை விவசாயத் துறையில் உடனடியாக மேற்கொள்ளத் தக்க விதி முறைகளை விளக்குவதாகவும் இப்பிரதேச விவசாயத்தை விருத்தி பண்ணுவதற்குரிய வழி வகைகளைக் கூறுவனவாகவும் அமைந்திருந்தன- யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் அ. துரைராசா கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற பேராசிரியர் சோ. கந்தையாவின் இறுதி அஞ்சலிக் கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்ட புதிய விவசாய பீடத்தைக் கட்டி எழுப்புவதில்மும்முரமாக உழைத்து வந்தவர் பேராசிரியர் கந்தையா.

வடமாநிலத்தின் தேவைக்கு ஏற்ற முறையிலான ஆராய்ச்சியிலும் அவர் ஈடுபட்டிருந்தார். அத்தோடு விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலான தொடர்பு வேலைகளிலும் ஈடுபட்டிருந்தார்.

அவரது திடீர் இழப்பு பெரும் அதிர்ச்சியைத் தந்துள்ளது.

இவ்வாறு துணைவேந்தர் கூறினார்.

பல்கலைக் கழக பதிவாளர் திரு. க. பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இறுதி அஞ்சலிக் கூட்டத்தில் மேலும் பலர் கலந்து கொண்டனர். [இ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1991-03-31 பக்கம் - 4

# யாழ். இந்துவில் கண்காட்சி

யாழ்ப்பாணம், மார்ச் 31 முத்தமிழ் விழாவை ஒட்டி எதிர்வரும் 6 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை— தினசரி பிற்பகல் 2 மணி முதல் மாலை 6 மணி வரை— யாழ். இந்து குமாரசாமி மண்டபத்தில் ஓவியக் கண்காட்சி இடம் பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [உ]

# மரண அறிவித்தல்கள்

## திரு. கந்தப்பர் ஆறுமுகம்
## திருமதி பத்மா ஆறுமுகம்
## செல்வி இந்திராணி ஆறுமுகம்
## செல்வி லோகநந்தினி ஆறுமுகம்

பொன்னாவளை களபூமி காரைநகரைச் சேர்ந்த கந்தப்பர் ஆறுமுகம், அவரது மனைவி பத்மா ஆறுமுகம், மகள்மாரான இந்திராணி, லோகநந்தினி ஆகியோர் நேற்று மாலை அகால மரணமானார்கள்.

அகால மரணமான கந்தப்பர் ஆறுமுகம் அவர்கள் காலம் சென்றவர்களான கந்தப்பு — தெய்வானை தம்பதிகளின் மகனும், காலம் சென்ற ரைம்ஸ் சங்கரப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், கமலாதேவி, [லண்டன்], சரோஜினிதேவி [லண்டன்], மகேந்திரன், ரவீந்திரன், யோகேந்திரன் ஆகியோரின் தந்தையும், குலேந்திரன், கோசலாதேவி ஆகியோரின் பெரிய தந்தையும், சிவா மகேசு [லண்டன்], தங்கராசா [லண்டன்], பரமேஸ்வரன், இராமநாதி, யசோதரன் ஆகியோரின் மாமனாரும், கந்தப்பர் நடராசா, காலஞ் சென்ற சிதம்பரம் ஆகியோரின் சகோதரனும், கந்தையா, தெய்வானை, பரமேஸ்வரி, சொர்ணம். விசுவநாதர், சிவகாமசுந்தரி ஆகியோரின் மைத்துனரும், டாக்டர் பரமசாமி [ஆஸ்திரேலியா], டாக்டர் கனகசுந்தரம் [ஆஸ்திரேலியா] அபயவிக்கிரம, ஆகியோரின் சகலனும், பத்மினி, கந்தையா, தெய்வானை ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

இவர்களின் ஈமக்கிரியைகள் யாழ்ப்பாணம் கே. கே. எஸ். வீதி 408 ஆம் இலக்க இல்லத்தில் இன்று காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல்கள் தகனக் கிரியைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
பரமானந்தசிவம்.

நந்தாவில், களபூமி,
காரைநகர்.

[15945]

## திரு. த. விநாயகமூர்த்தி

கொட்டைக்காட்டைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வதிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய யாழ்ப்பாணக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் திரு: தம்பிராசா விநாயகமூர்த்தி [B A, J.P] காலமானார். இவர் வைரரத்தினத்தின் அன்புக் கணவரும் சுபத்திராதேவி [யாழ்ப்பாணக் கல்லூரி] Dr V. தம்பிராஜா [R.M.P, பக்கமுனா], புனிதவதி [வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த ம. வித்தியாலயம்], மணிமேகலா [மானிப்பாய் மகளிர் கல்லூரி] சிவசோதிராஜா [களஞ்சியப் பொறுப்பாளர்] ஆகியோரின் அன்புத் தந்தையும் கேசவராஜன் [கொத்தணி அதிபர், மானிப்பாய்], சிவசோதி [கொக்குவில்], இராஜரட்ணம் [வெஸ்லிக் கல்லூரி கொழும்பு], S T. சம்பந்தர் [ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய ம. வித்தியாலயம்], சுபாஷினி [சண்டிலிப்பாய்] ஆகியோரின் அன்பு மாமனாரும் தாக்சாயினி, கணாதீபன், வரப்பிரதன், பிரதீபன், பிரசாந்தி, ஐங்கரன், அபராஜிதன், திருமாறன், சிவகிரியன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 31 - 3 - 91 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். கல்லூரி ஒழுங்கை வட்டுக்கோட்டையில் நடைபெறும், இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
C. கேசவராஜன்

யாழ். கல்லூரி ஒழுங்கை,
வட்டுக்கோட்டை.

[16264]

## சுப்பிரமணியம் சத்தியநாதன்
### ( குகன் )
[ பொறியியலாளர் - சிவில் ]

சுப்பிரமணியம் சத்தியநாதன் காலமானார். இவர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் பழைய மாணவரும், இருபாலையூர் காலஞ் சென்ற முன்னாள் இ. போ. ச. ரிக்கற் பரிசோதகர் கதிர்காமர் சுப்பிரமணியம் - நாகேஸ்வரி தம்பதியினரின் அன்புப் புத்திரனும், சாம்நாதன், லோகாதேவி, கோசலாதேவி, சுகாதேவி, விமலாதேவி, அருள்தேவி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 24-3-91 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொழும்பில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகிறார்கள்.

தகவல் :
திருமதி நா. சுப்பிரமணியம்

பட்டையடி,
இருபாலை,
கோப்பாய்.

[16266]

# இனம் தெரியாத சடலம்

யாழ்ப்பாணம், மார்ச் 31 மிருசுவில் வடார்க்காடு தோட்டப்பகுதிக் காட்டுக் கரையில் தூக்குமாட்டி தற்கொலை செய்து கொண்ட நிலையில் சுமார் 60 வயது மதிக்கத்தக்க ஒருவரின் சடலம் காணப்பட்டது.

அடையாளம் காணப்படாத இந்தச் சடலத்துக்கு அருகே நீல நிற சைக்கிள் ஒன்று காணப்பட்டது.

உயிரிழந்தவர் பற்றிய தகவல்களை தெரிந்தோர் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மிருசுவில் பணிமனையோடு தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது. [உ]

# நாட்டுக்கூத்து

குருநகர், மார்ச் 31 ஈஸ்டர் திருநாளை முன்னிட்டு ''அனைத்தும் அவரே'' என்ற தலைப்பில் தவக்கால சிந்தனைகளை ஊட்டும் நாட்டுக் கூத்தை யாழ். திருமறைக் கலா மன்றம் மாலை 6 மணிக்கு யாழ். பிரதான வீதியில் உள்ள கலை அரங்கில் மேடையேற்ற உள்ளது. [உ-51]

# கருத்தரங்கு

குருநகர், மார்ச் 31 ''கடற்றொழிலும் இன்றைய சூழ் நிலைக்கேற்ற தேவைகளும்'' என்ற தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு குருநகர், கார்மேல் மாதா மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவு உற்பத்திக் குழுக்களின் இணையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மேற்படி கருத்தரங்கில் தமிழீழ ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் கலந்து கொள்வர். [உ-51]

# மத தலைவர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 31 மன்னார் ஆயர் ஸ்ரீலங்கா இராணுவத்தினால் தாக்கப்பட்டத்தை ஆட்சேபிக்கும் முகமாக சர்வமதத்தலைவர்களின் ஆலோசனைக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு நல்லூர் திவ்விய ஜீவன மண்டபத்தில் நடைபெறும். ''பாலம்'' என்ற பொதுப்பணி மன்றம் இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ளது. உ|

# திறப்பு விழா

மருதனார்மடம் கோட்ட கல்வி முறைசாராப் பிரிவு உபவள நிலையத் திறப்பு விழா எதிர்வரும் நாலாம் திகதி இரமநாதன் கல்லூரியில் நடைபெற உள்ளது.

யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் நிலையத்தைத் திறந்துவைப்பார். [இ - 68]

# மன்னார்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ணன், துஷான், பொஸ்கோ ஆகியோர் உட்பட பதினொரு போராளிகள் வீரமரணமடைந்தனர். [உ]

# ட்ரக் - ஓட்டோ...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

லிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து எதிர்த் திசையில் ''எல்வ்'' வாகனம் ஒன்று சென்று கொண்டிருந்தது.

செட்டியா மடம் தேவாலயத்துக்குச்சமீபமாக வளைவு ஒன்றில் இரண்டு வாகனங்களும் நேருக்குநேர் மோதுண்டன.

''ஓட்டோவு''க்குப் பின்னால் மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த திருநெல்வேலியைச் சேர்ந்த [illegible] என்பவர் படுகாயமுற்றார். ஓட்டோவும் முற்றாகச் சேதமடைந்தது. [அ-15]

# அ. தி. மு. க. - இ. காங்கிரஸ் தேர்தல் உடன்பாடு

சென்னை, மார்ச் 31 தமிழ்நாடு, புதுச்சேரி நாடாளுமன்ற மற்றும் சட்டசபைத் தொகுதிகளில் போட்டியிடுவது குறித்து இந்திரா காங்கிரஸ் கட்சிக்கும் அ. தி. மு. க. வுக்கும் இடையே பூரண உடன்பாடு ஏற்பட்டுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

காங்கிரஸ் தலைவர் திரு: ராஜீவ்காந்தி நேற்று சென்னையில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவுடன் விரிவான பேச்சுக்களை நடத்தினார். அதன் பின்னர் நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் உடன்பாடு பற்றிய விவரங்களை திரு: ராஜீவ்காந்தி வெளியிட்டார்.

தமிழ் நாடு மாநிலத்தில் உள்ள 39 நாடாளுமன்றத் தொகுதிகளில் 28 இல் இந்திரா காங்கிரஸ் போட்டியிடும். எஞ்சிய 11 தொகுதிகளில் அ.தி.மு.க. போட்டியிடும்.

தமிழக சட்டசபை தேர்தலில் 168 தொகுதிகளில் அ. தி. மு. க. வும் 66 தொகுதிகளில் இந்திரா காங்கிரஸும் போட்டியிடும்.

பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தில் உள்ள ஒரே ஒரு நாடாளுமன்றத் தொகுதி இந்திரா காங்கிரஸுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

பாண்டிச்சேரி சட்டசபையில் உள்ள 30 இடங்களில் 20 இந்திரா காங்கிரஸுக்கு ஒதுக்கப்படும். எஞ்சிய 10 தொகுதிகளில் அ. தி. மு. க. போட்டியிடும்.

— இப்படி தொகுதி உடன்பாட்டில் கூறப்பட்டுள்ளது.

# 40 ரூபாவுக்கு மண்ணெண்ணை

யாழ்ப்பாணம், மார்ச் 31 யாழ்ப்பாணத்தில் தற்போது மண்ணெண்ணையின் விலை படிப்படியாகக் குறைந்து வருகிறது.

சில நாட்களுக்கு முன்னர் 80 ரூபாவுக்கு மேல் கள்ள சந்தையில் விலைபோன மண்ணெண்ணெய் தற்போது 40 ரூபாவுக்கு வெளிச் சந்தையில் விற்பனையாகிறது.

நேற்றுப் பல இடங்களிலும் கடைகளில் வைத்து மண்ணெண்ணெய் விற்பனை செய்யப்பட்டது.

நேற்று யாழ். இவலிங்கப் புளியடியில் கடையொன்றில் லீற்றர் 40 ரூபாவுக்கு விற்கப்பட்ட போது மழையையும் பொருட்படுத்தாது மக்கள் கியூவில் நின்று வாங்கினர். [அ-5]

## கைதானார்

போலி தஸ்தாவேஜுகள் மூலம் கனடாவுக்கு ஆட்களை அனுப்பி வந்த கோஷ்டி ஒன்றின் முக்கிய பிரமுகர் ஒருவரை இரகசியப் பொலீஸார் கடந்த புதன்கிழமை கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்தனர்.

ஒரு தமிழ் இளைஞரையும், யுவதி ஒருவரையும் கனடாவுக்கு அனுப்பி வைப்பதற்காக அந்த நபர் கட்டுநாயக்கா சென்றிருந்த போதே கைது செய்யப்பட்டார். [இ-எ]

# குறிகாட்டுவானில் ஷெல்!

புங்குடுதீவு, மார்ச் 31 கடந்த புதனன்று இரவு 7. 30 மணியளவில் நயினாதீவு கடற்படை முகாமிலிருந்து எவப்பட்ட மூன்று ஷெல்கள் புங்குடுதீவு, குறிகாட்டுவான் பகுதியில் வீழ்ந்து வெடித்தன.

குறிகாட்டுவான் பகுதியிலிருந்த ஹோட்டல் ஒன்றின் முன் விழுந்து வெடித்த ஷெல்லினால் அந்த ஹோட்டல் சேதமடைந்தது.

ஒரு ஷெல் கடற்கரைப் பகுதியில் விழுந்து வெடித்தது. [உ-131]

# பூநகரியில் விழுந்த ஷெல் எங்கிருந்து வந்தது?

## ஒருவர் காயமடைந்தார்

என்றுமில்லாதவாறு பூநகரிப் பகுதியில் நேற்று ஷெல்கள் விழுந்து வெடித்தன.

மினாசி ஓடையில் ஒரு வீட்டின் அருகே இரண்டு ஷெல்கள் அடுத்தடுத்து விழுந்து வெடித்தன. அதனால் அந்த வீடு பலத்த சேதமடைந்தது. அயல் வீட்டில் நின்ற ஒருவர் காயமடைந்தார்.

ஷெல் வெடித்துச் சிதறியதால் காயமடைந்த சிதம்பரப்பிள்ளை ஸ்ரீகாந்தராசா [28 வயது] யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஷெல்கள் எங்கிருந்து ஏவப்பட்டன என்பதை நிச்சயமாகக் கூற முடியவில்லை. அனேகமாக மேற்குத் திசையிலிருந்தே வந்திருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. [அ-15]


# பியோன் தேவை

அலுவலகப் பியோன்களாகப் பணிபுரிவதற்கு ஜி. சீ. ஈ. சாதாரண தர கல்வித் தகைமை உடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வயதெல்லை: 18 முதல் 30 வரை

விண்ணப்பதாரர்கள், தமது சொந்தக் கையெழுத்தில், 8''X11'' அளவுடைய காகிதத்தில் எழுதப்பட்ட விண்ணப்பங்களுடன் நேரில் சமுகமளிக்க வேண்டும். அவ்வாறு வரும் போது, தங்கள் உறவினரல்லாத இருவரிடம் இருந்து பெற்ற நற்சான்றுப் பத்திரங்களைக் கொண்டு வருதல் அவசியம்.

அலுவலக நாட்களில் நண்பகல் 1 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை மட்டுமே நேர்முகப் பரீட்சை நடத்தப்படும்.

முகாமையாளர்,
ஷப்றா யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்,
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-5894]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 282/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 31 - 03 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org